# சேலம் : நம்பிக்கையின் உதயம்!



**அது ஜனநாயகப் போர்க் களத்துக்கு இளைஞர்களைத் தயார் செய்யும் பாசறையா?**

**அறிவுச் சான்றோர் கூடி நடத்திய பல்கலைக் கழகக் கருத்துப் போரா?**

**இந்தியாக் கூட்டணியின் வெற்றி விழாவா? -**

இந்த மூன்று கேள்விகளுக்கும் இன்னும் பதிலை எட்ட முடியவில்லை. இந்த மூன்றையும் மொத்தமாகச் சேர்த்து நடத்திக் காட்டிவிட்டார் எழுச்சிமிகு உதயம், மாண்புமிகு அமைச்சர் உதயநிதி அவர்கள்.

ஏசியவர்கள் - ஏளனமாகப் பார்த்தவர்கள் - எள்ளி நகையாடியவர்கள் - எரிச்சல் அடைந்தவர்கள் - எகத்தாளம் போட்டவர்கள் - அத்தனை பேரையும் மொத்தமாக 'ஏமாற்றிவிட்டார்' மாண்புமிகு உதயநிதி அவர்கள்.

'வாரிசு' என்பதால் அழைத்து வரப்படுவதாகவும் - 'வாரிசு' என்பதால் வசைக்கு ஆளானார். ஆனால் கொள்கை விசையைச் சிக்கெனப் பிடித்து இளையோர் அனைவரையும் தன்வசப்படுத்தி - எதிர்கால ஏற்றத்துக்கு பாதை அமைத்துத் தரும் சாரதியாக உயர்ந்துவிட்டார் உதயநிதி. இனி அவர்களால் அவரை விமர்சிக்க முடியாது. அவரது கொள்கையை வேண்டுமானால் விமர்சிக்கப் பழகலாம்.

சேலம் இளைஞரணி மாநாடு இந்த நாட்டுக்குச் சொல்லும் செய்தி ஒன்றுதான்: " தமிழ்நாட்டின் காப்பரண் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் - தமிழ்நாட்டுக்கும் இன்னொரு அரை நூற்றாண்டு காலத்துக்கு காவல் தளபதிகள் தயாராகி விட்டார்கள்" என்பதுதான்!

திரும்பிய பக்கமெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீரர்கள் பட்டாளம். 'இந்தப் படை போதுமா?' என்பது வழக்கமாக கேட்கும் வாழ்த்து மொழி. ' இந்தப் படை போதும்' என்பதே சேலம் சொல்லிய சைகை மொழி.


வேட்டிகளை எண்ணி விடலாம். மொத்தமும் பேண்ட், ஜீன்ஸ், டீ சர்ட்டுகள் தான். பல்லாயிரக்கணக்கான வாகனங்கள் வரும் என்பதால் மாநாட்டுப் பந்தலுக்கும் வாகனங்கள் நிறுத்தும் இடத்துக்கும் இரண்டு, மூன்று கிலோ மீட்டர் தூரம் இருந்தது. அங்கே வாகனங்களை நிறுத்திவிட்டு, ஊர் வாரியாக - ஊர்வலமாகவே முழக்கமிட்டு வந்தார்கள் இளைஞர்கள். பொதுவாக மாநாடுகளில் ஊர்வலங்கள், பேரணிகள் நடத்தி பல ஆண்டுகள் ஆகிவிட்டது. ஆனாலும் என்ன? அறிவிக்கப்பட்டாத பேரணியை இளைஞரணியினரே நடத்தினார்கள்.

**தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அந்தக் காலத்தில் மொத்தமாக நடத்திக் காட்டிய பேரணிப் போர்ப்பரணியை, இப்போது தனித்தனியாக நடத்திக் காட்டி விட்டார்கள் இளைஞரணியினர்.**

மாநாடு தலைகளால் நிரம்பி இருந்தது. மாநாட்டுப் பந்தலுக்குள் நிரப்ப முடியாத தலைகள் லட்சக்கணக்கில் பந்தலுக்கு வெளியே இருந்தது. சேலம் - ஆத்தூர் சாலையின் இருபக்கமும் இருந்தது. இருவண்ணக் கொடி காக்கும் போர்ப் படை வீரர்கள், எல்லாப் பக்கமும் இருந்தார்கள்.

அந்தப் பக்கம் சேலத்தில் இருந்து வந்தாலும் - இந்தப் பக்கம் கள்ளக்குறிச்சியில் இருந்து வந்தாலும் எல்லாப் பக்கமும் திமுக பக்கமாக இருந்தது. அவர்கள் அனைவரது உடையிலும் நடையிலும் குரலிலும் இருந்த எடுப்பும், மிடுக்கும் மூத்த முன்னோடிகளை வியப்பில் ஆழ்த்தியது. எதிரணியினரை விம்ம வைத்தது.


" இனி இந்த இயக்கத்தை எந்தக் கொம்பனாலும் தொட்டுக் கூட பார்க்க முடியாது" என்று சொன்னார் தலைவர் என்றால், அது சும்மா அல்ல. 'அப்படிச் சொல்லும் வாய்ப்பை வழங்கினார் இளைஞரணிச் செயலாளர் உதயநிதி' என்று தலைவர் சொன்னதும் வாய் வார்த்தை அல்ல.















**தானாய் கூட்டம் சேர்வது எவ்வளவு சிரமம் என்பது தலைவருக்குத் தெரியும். 1980களின் மத்தியில் இருந்து தமிழ்நாட்டு ஊர் ஊராகக் கிராமம் கிராமமாக, நகர் நகராக, தெருத் தெருவாக வலம் வந்தவர் அவர். காரை அவரே ஓட்டி, கழகத்தை ஓட்டியுயர்த்திக் காட்டியவர் அவர். துளித்துளியாய் இளைய சக்தியைச் சேர்த்தவர் அவர். நாற்பதாண்டு கால கழகத்தின் வெற்றிக்கும், தோல்விகளுக்குப் பின்னால் வீழ்ந்து போகாமல் இருப்பதற்கும் காரணம், அந்தக் காலத்தில் அவர் திரட்டிக் கொடுத்த இளைஞர்கள் தான் காரணம்.**

இப்போது மீண்டும் இளைஞர்கள் தேவை. இளைய ரத்தம் தேவை. போர்க்களங்கள் அதிகமாகி வருவதால் போர் வீரர்களும் அதிகம் தேவை. சமூக வலைத் தளங்களின் தாக்கம் காரணமாக, அறிவுப் பருவம் அடையும் வயது இப்போது குறைந்து விட்டது. எனவே, அவர்களை வளர்த்தெடுத்தாக வேண்டிய தேவை இருக்கிறது. இந்த நிலையில் தான் உதயநிதி உதயமானார்.

2019 ஆம் ஆண்டு இளைஞரணிச் செயலாளராக அறிவிக்கப்பட்டது முதல் தலைவரைப் போலவே, ஓய்வில்லாத உழைப்பை வழங்கத் தொடங்கினார். மூத்த முன்னோடிகள் அனைவரையும் பார்த்து பொற்கிழி கொடுத்து வணங்கி நின்றார். இளைய தம்பிமார்கள் அனைவருக்கும் பயிற்சி பாசறைக் கூட்டங்கள் நடத்தி வழிகாட்டிக் கொண்டிருந்தார். மூத்தோரை மதித்தலும் - இளையோர் மதியை பெருக்குதலுமே தலைமைக்கான இலக்கணங்கள். இரண்டையும் கனசுத்தமாகச் செய்தார் இளைஞரணிச் செயலாளர் உதயநிதி அவர்கள்.

இந்த மொத்தக் கூட்டத்தையும் ஒரு முகப்படுத்த ஒரு வாய்ப்பை வழங்கினார் தலைவர் அவர்கள். சேலத்தில் மாநாடு அறிவிக்கப்பட்டது. சேலம் மாநாட்டுக்காக மாவட்டம் தோறும் இளைஞரணிச் செயலாளர் கூட்டங்கள் நடத்தினார். அதுவே மினி மாநாடுகளாக அமைந்திருந்தன. முப்பது மாவட்ட மாநாடுகளை நடத்திக் காட்டி விட்டுத்தான் முழு மாநாடாக சேலத்தைக் குறித்தார்கள். சேலம் முழுமையான மாநாடாக அமைந்து விட்டது.

ப.திருமாவேலன்

ஒரு மாநாடு எப்படி நடத்த வேண்டும் என்பதற்கு இலக்கணக்கனமாக அமைந்து விட்டது சேலம். மாநாட்டுகள் நடத்தியே 'டாக்டர்' பட்டம் வாங்கியவர் கழகத்தின் முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்கள். சேலத்துக்கு பொறுப்பாளர் என்பதால் மட்டுமல்ல, மாநாடுகளுக்கே பொறுப்பாளர் அவர். அதனையும் மெய்ப்பிக்கும் களமாக அமைந்துவிட்டது.

**இது வரை இத்தனை பெரிய பந்தல் போட்டது இல்லை. இதுவரை ஆறுலட்சத்துக்கும் அதிகமான இவ்வளவு பெரிய இளைஞர் கூட்டம் ஒரே இடத்தில் திரண்டது இல்லை. இதுவரை இரும்புக்குதிரையாம் புல்லட் வாகனத்தில் இத்தனை ஆயிரம் பேர் அணி வகுத்து வந்தது இல்லை. இதுவரை ஆயிரத்துக்கும் மேலான ட்ரோன் கேமராக்கள் ஒரே இடத்தில் வட்டமடித்தது இல்லை. ட்ரோன் காட்சிகளில் பெரியாரும், அண்ணாவும், கலைஞரும் வந்ததும் இல்லை. கோடிக்கணக்கான தமிழ் மக்களின் இதயத்தில் வீற்றிருக்கும் அன்புமிகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வானத்தில் வட்டமிடும் உருவத்தில் மின்னிய போது எழுந்தது கைதட்டல். பின்னர் விசில்.**

5 ஆயிரம் புகைப்படங்கள் கொண்ட மாபெரும் கண்காட்சி வரலாற்றை நம் கண் முன் விரித்திருந்தார் கோவை சுப்பு!

மாநாட்டு திடல்களில் ஆங்காங்கே புத்தக விற்பனை நடக்கும். தரையில் பரப்பி வைத்திருப்பார்கள். புத்தகக் கண்காட்சியாகவே இதுவரை அமைத்தது இல்லை. காலையில் தொடங்கி மாலையில் வரை - தலைப்புகளில் பேசியவர்கள் அனைவரும் கொள்கை முழக்கம் இட்டார்கள். 'திமுக மேடைகள், மாலை நேரத்துக் கல்லூரிகள்' என்ற பேரறிஞர் அண்ணாவின் கனவுக்கு வலுச்சேர்த்தன இவ்வுரைகள். தேர்தல் அரசியலில் இறங்கி, ஆட்சியில் இருக்கும் எந்தக் கட்சியாவது இத்தகைய தத்துவார்த்த உரைவீச்சுகளுக்கு மேடையைக் கொடுத்திருக்குமா? கொடுத்திருக்காது. இத்தகைய அறிவுக்குரிய தீர்மானங்களைப் போட்டிருப்பார்களா? மாட்டார்கள். இவை அனைத்தும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தான் நடக்கும்.

ஏனென்றால் தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - தமிழினத் தலைவர் கலைஞர் - மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் - இளைஞரணிச் செயலாளர் மாண்புமிகு உதயநிதி என்ற தலைமுறை நீட்சி என்பது தத்துவத்தின் நீட்சியாக அமைந்திருக்கிறது. அதனால் தான் மாநாடுகள் கூட பாசறைகளாக அமைகின்றன. பல்கலைக் கழகங்களாகத் தெரிகின்றன.

சேலம் நோக்கி வந்த தீரர்கள் அனைவர்க்கும், பாசிச பா.ஜ.க.வை வீழ்த்தும் கடமைக் களப்பணியைத் தந்துள்ளார் தலைவர். இத்தனை லட்சம் பேர் கொள்கை உரத்தோடு பாசிசத்துக்கு எதிராக மூச்சுப் பரப்புரையைச் செய்தாலே பாசிசம் வீழும். எனவே, சேலம் கர்ஜனைகள், நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியையும் உறுதி செய்துள்ளது. பொதுவாக தேர்தல் காலங்களில் தேர்தல் சிறப்பு மாநாடு நடத்துவது வழக்கம். இளைஞரணி மாநாடே தேர்தல் சிறப்பு மாநாடாக அமைந்துவிட்டது.

**வெற்றிக்குப் பிறகு நடைபெற வேண்டிய வெற்றி விழா மாநாட்டையும் சேர்த்து நடத்திக் காட்டிவிட்டார் இளைஞரணிச் செயலாளர் அவர்கள். பெரிதினும் பெரிது செய்யும் பெரும்படை அவர் கையில் இருக்கிறது. சிறிதினும் சிறிது கீழ்மை செய்யும் கூட்டத்தின் ஆட்டத்தை முடிக்க வேண்டிய கடமையும் அவர் கையில் இருக்கிறது.**